சார்பு நீதிமன்றம், மேலூர்

OS No. 234/2021

பெயர் : முத்துச்சாமி

தகப்பனார் பெயர் :ஒய்யான்

கணவர் பெயர் :

வயது :52

கிராமம் :தெற்குதெரு

வட்டம் :மேலூர்

தொழில் :கூலிவேலை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

17.02.2025

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். 18.04.2017 தேதியில் என் அம்மா என் பெயரில் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் அசல் வா.சா.ஆ.1. 12.01.1999 என் தாயார் கத்தப்பட்டு அவர்களின் பேரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் வா.சா.ஆ.2. சிட்டா வா.சா.ஆ.3. அடங்கல் பதிவேடு வா.சா.ஆ.4. நான் காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு கொடுத்துள்ள புகார் நகல் வா.சா.ஆ.5. 12.07.2021 தேதியிட்ட என் தம்பி செல்வராஜ் அவர்கள் எனக்கு கொடுத்துள்ள சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.6. 21.07.2021 தேதியில் எனது வழக்கறிஞர் கொடுத்த பதில் அறிவிப்பு வா.சா.ஆ.7. அதை அவர்கள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.8. வீட்டு வரி ரசீது அசல் வா.சா.ஆ.9. என்னுடைய பாஸ்போர்ட் ஒளிநகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.10. நான்

வெளிநாட்டில் இருந்து என் தாயாருக்கு பணம் போட்டதற்கான ரசீதுகள் வா.சா.ஆ.11 முதல் வா.சா.ஆ.36 வரை. அ.வ.எண்.226/2021 வழக்கின் பிராது நகல் வா.சா.ஆ.37. சொத்து வரி ரசீது நகல் வா.சா.ஆ.38 மற்றும் வா.சா.ஆ.39 என் தாயாரின் வங்கி வரவு செலவு கணக்கு 01.01.2007 முதல் 31.12.2007 வரை வா.சா.ஆ.40. நான் வெளிநாட்டில் வேலை செய்ததற்கான அடையாள அட்டை வா.சா.ஆ.41.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.02.17 18:54:51 +0530

Sub Judge

Melur